★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 15௳ வியாழன் (30—8—56) ★ ★ வெளியீடு : ஆவணி 16௳ வெள்ளி (31—8—56) [இதழ் 69

இந்தியப் புகையிலையை வாங்குவதில் அக்கறை

'எகிப்து, செக்கோசுலோவேக்கியா, ரஷ்யா ஆகிய நாடுகள் சமீப காலத்தில் இந்தியப் புகையிலையை வாங்குவதில் அக்கறை காட்டிவருகின்றன' என்று, மாநிலங்கள் சபையில், வர்த்தக மந்திரி தெரிவித்துள்ளார்.

இந்தியப் புகையிலையின் மாதிரிகள் ரஷ்யாவுக்கும் எகிப்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன என்றும், செக்கோசுலோவேக்கியாவிலிருந்து ஒரு பரீட்சார்த்த 'ஆர்டர்' கூடிய சீக்கிரத்தில் எதிர்பார்க்கப்படுகிறதென்றும் அவர் கூறினார்.

வடக்கும்-தெற்கும் மோதிக்கொள்ளும் காலம் வரத்தான் போகிறது!

'மாகாண விவகாரங்களில் டெல்லி அளவு மீறி குறுக்கிடுகிறது'

'தாமோதர் நதிப் பள்ளத்தாக்கில் பெருந் தொகை பாழடிக்கப்பட்டிருக்கிறது'

'சர்வோதயம் பேசுகின்றனர்! ஆனால் பிறநாட்டு இயந்திரங்களுக்கு வாய் பிளக்கின்றனர்!'

'பதவியைத் துறந்ததும் மேலும் பல உண்மைகளை உரைப்பேன்'

பதவியைத் துறக்கும் ஒரிசா கவர்னர் பி. எஸ். குமாரசாமி இராசா அவர்களின் குமுறல்

கோவை, ஆக. 29—

டில்லியை தேவபீடமாகவும் அந்த பீடத்தில் அமர்ந்து ஆட்சி புரியும் பெரிய மனிதர்கள் கூறுவதெல்லாம் தேவாட்சரமாகவும் ஏற்றுக்கொண்டு 'தங்கள் சித்தம்—எங்கள் பாக்கியம்' என்று தொழுதடிமைகளாக வாழும் பலருக்கு, ஒரிசா மாநில கவர்னர் கனம் குமாரசாமி இராசா அவர்கள், டில்லியின் போக்கு குறித்துத் தந்திருக்கும் விளக்கம், சாட்டையடி தருவதாக உள்ளது.

'மானியம் வழங்குபவர்களாக டில்லி சர்க்கார் இருப்பதால் அவர்கள் மாநில சர்க்காரின் விவகாரங்களில் அளவுக்கு மீறித் தலையிடுகிறார்கள்' என்று குமாரசாமி இராசா அவர்கள் குற்றம் சாட்டியிருக்கிறார்.

"நான் பதவியிலிருந்து சீக்கிரமே விலகிவிடப்போகிறேன்; அப்போது இது குறித்து சுதந்திரத்தோடு நான் மேலும் பல கருத்துக்களை அறிவிக்கமுடியும்.

"கல்வித் துறையில் மட்டுமின்றி, இதர துறைகளிலும் நமக்குள்ள சிக்கலான பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுவதற்காக நாம், உச்சமான அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவர்களோடு மோதிக்கொள்ளும் காலம் விரைவிலேயே வரத்தான் போகிறது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இங்கு இராமலிங்கச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் புதிய கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குமாரசாமி இராசா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் ஊன்றிக் கவனித்துப் படித்துப் பயன்பெற வேண்டிய ஒன்றாகும்.

'சென்னை மாநில எஞ்சினீயர்கள் அணைகள் கட்டுவதில் விசேடத் திறன்படைத்தவர்கள் என்பதை எல்லோரும் அறிவர்; ஆனால் வடநாட்டு மாநிலங்களில், குறைந்த செலவில் கட்டக்கூடிய அணைகள் எல்லாம் மிக அதிகமாகச் செலவு செய்து கட்டப்படுகின்றன.

'சென்னை மாநிலத்தில் சுமார் 10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட கீழ்பவானி அணைக்கட்டுத் திட்டம் முழுவதற்கும் ஒரே ஒரு நிர்வாக எஞ்சினீயர் பொறுப்பாயிருந்தார். ஆனால் வடநாட்டில், இதுபோன்ற அணைக்கட்டுத் திட்டங்களுக்காக ஒரு எஞ்சினீயர், மற்றும் நான்கு நிர்வாக எஞ்சினீயர்கள் சேர்ந்து வேலை செய்கிறார்கள்.

"வடநாட்டு எஞ்சினீயர்கள், அணை கட்டுவதற்குக் கற்களை உபயோகப்படுத்த மறுக்கிறார்கள்.

"சர்வோதயம் பேசுகிறவர்களையும், குடிசைத் தொழில்களை ஆதரிப்பவர்களையும் உள்ள வடநாட்டவர், இயந்திரங்கள் எல்லாம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டுமென விரும்புகிறார்கள்.

"'இந்தியாவின் பெருமை' என்று வர்ணிக்கப்படுகிற தாமோதர் நதிப் பள்ளத்தாக்குத்திட்டத்தில் பொது மக்களின் வரிப் பணம் பெருமளவில் பாழடிக்கப்பட்டிருக்கிறது; நான் அந்தத் திட்டப் பிரதேசத்திற்கு அண்மையில் சென்றிருந்தேன்; அங்கே, ஒரு பிரதம எஞ்சினீயர் நீங்கலாக சுமார் அரை டஜன் நிர்வாக எஞ்சினீயர்களைக் கண்டபோது ஆச்சரியப்பட்டேன்; ஏனெனில், அவர்கள் அத்தனை பேரும் பார்க்கிற வேலைகளை, ஒரு நிர்வாக எஞ்சினீயரே பார்க்க முடியும்.

"அதிகாரிகளின் வேலைகளில் மந்திரிகள் மிதமிஞ்சித் தலையிடுகிறார்கள்; அதிகாரிகள் செய்யும் வேலை நூற்றுக்கு நூறு சரியாக—தவறேதுமின்றி இருந்தாலும், ஏதாவது மாற்றம் செய்வதை மந்திரிகள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள்.

'தென்னாட்டில் உள்ள நாம், அணைகள் கட்டுவதற்கு அமெரிக்காவிலிருந்து வரும் இயந்திரங்களோ, சிமெண்டோ வேண்டுமென எதிர்பார்ப்பதில்லை; ஆனால் சர்வோதயம் பேசும் வடவர், அமெரிக்க இயந்திரங்களும் சிமெண்டும், அணை கட்டுவதற்குத் தேவையென எதிர்பார்க்கிறார்கள். இப்படித்தான் வடநாட்டு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் ஏராளமான பணம்—பெரும் தொகையாகப் பாழடிக்கப்பட்டிருக்கிறது."

'தன்னிறைவு' பெற்ற இந்தியாவின் நிலை!

ரூ. 172 கோடி பெறுமானமுள்ள உணவுப் பொருள்கள்

3 ஆண்டில் அமெரிக்காவிலிருந்து இறக்குமதியாகுமாம்

டில்லி சர்க்கார் போக்கு!

புதுடில்லி, ஆக. 30—

உடனடியான உபயோகத்திற்கு மட்டுமின்றி, நெருக்கடி காலத் தேவைக்கான கையிருப்பை வைத்துக்கொள்வதற்கும், அவசியமாக இருக்கிற உணவுத் தானியத் தேவைகளைச் சமாளிப்பதற்கும் — கட்டுப்படுத்துவதற்கும், சமூக விரோத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும் அடிகோலுவதற்காக அமெரிக்காவிலிருந்து 'உபரி' உணவுப் பண்டங்களை இறக்குமதி செய்யும் ஒரு ஒப்பந்தம் இந்தியா—அமெரிக்கா சர்க்கார்களுக்கிடையே கையெழுத்தாகியுள்ளதாகத் தெரிகிறது.

கப்பல் செலவில் பாதியை (ரூ 25 கோடி) ஏற்பது உட்பட அடுத்த மூன்றாண்டுகளில் ரூ. 172 கோடிக்குச் சமமுள்ள 36 கோடி டாலர் பெறுமானமுள்ள 'உபரி' உணவுப் பொருள்களை இந்தியாவுக்கு அமெரிக்கா வழங்கும்; அவையாவன:—

20 கோடி டாலர்—கோதுமை; 2,64,00,000 டாலர்—அரிசி; 7 கோடி டாலர்—பருத்தி; 60 இலட்சம் டாலர்—புகையிலை; 35 இலட்சம் டாலர்—பால் பொருட்கள்.

2 இலட்சம் டன் அரிசியும், 5 இலட்சம் பேல் (தலா 480 ராத்தல்) பருத்தியும் இப்போதைய மார்க்கெட் விலையின் அடிப்படையில் வாங்கப்படும். 1957 ஜூன் 30-ந் தேதிக்குள் எல்லா அரிசியும் அனுப்பப்பட்டுவிடும்; இந்தப் பண்டங்களுக்கு இந்தியா செலுத்த வேண்டிய பணம் கடனாக பாவிக்கப்படும்.

'நல்லதோ—கெட்டதோ, காமராசர் செய்தது என்ன?'

'ஆளுவோர் எதைக் கொண்டு பெருமைப்பட முடியும்?'

சென்னையில் அண்ணா முழக்கம்

கழகத்தின் எட்டாண்டுக் கால நற்பணிகள் குறித்து விளக்கம்

தேர்தலில் ஈடுபடுவதின் நோக்கம் பற்றி தெளிவுரை

"நாட்டை ஆள்பவர்கள், எதைக்கொண்டு பெருமைப்பட முடியும்?—வேலையில்லாத மக்களுக்கு வேலை தேடித்தந்தோம்; மக்கள் அனைவருக்கும் மூன்றுவேளை உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் பெற்றுத் தந்தோம்; அவர்களை சுகமாக வாழவைத்தோம்'—என்பதில்தானே ஆட்சியாளரின் பெருமை இருக்கமுடியும்?

"காமராசர் ஆட்சிக் காலத்தில் நல்லதோ, கெட்டதோ அவர் என்ன செய்தார்? 'இது, காமராசர் செய்தது' என்று சொல்லுவதற்கு—சுட்டிக் காட்டுவதற்கு என்ன இருக்கிறது?

"ஆச்சாரியாருக்காவது, நல்லதையும் கெட்டதையும் செய்த 'பெருமை' உண்டு பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தார்; 'ரேஷனை' எடுத்தார்; இதை நல்ல காரியங்கள்! 'குலகல்வித் திட்டம்' கொண்டுவந்தார்—தீய திட்டம்!

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணா அவர்களுக்கு

★

நாரவாரிகுப்பம் (ரெட்ஹில்ஸ்) ஊராட்சி மன்ற வரவேற்பு

10—9—56 அன்று நாரவாரிகுப்பம் (ரெட்ஹில்ஸ்) வருகை தரும் அண்ணா அவர்களுக்கு, ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பளிப்பதென, 24—8—56-ல் நடைபெற்ற அவ்வூர் ஆட்சிமன்றக் கூட்டத்தின்போது பெரும்பான்மையான வாக்குகள் பெற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இயற்கை எய்தினார்

கராச்சி, ஆக. 29—

சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் கவர்னர்-ஜெனரல் குலாம் முகம்மது தனது 61-வது வயதில், இன்றிரவு 10-20 மணிக்கு மாரடைப்பால் இயற்கை எய்திவிட்டார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30—8—'56 வியாழன்

'பாவ சங்கீர்த்தனம்'!

தென்னாட்டு மக்களின் சுதந்திர ஆதிபத்திய உரிமைகளைப் பறித்து வைத்துக்கொண்டிருக்கும் வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள், 'மிகக் கொடூரமான எசமானர்கள்' என்பதை, அவர்கள் 'அகில இந்தியாவிற்கும் என்று கூறி தயாரித்து நிறைவேற்றிய — நிறைவேற்றி வரும் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு இழைத்த பெரும் அநீதிகள் பிரகடனப்படுத்தியுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்கள் என்ற விளக்கத்தோடு பெருமைபடக் கூறப்படும் ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னாட்டிற்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மையைப் பார்க்க மறுப்பவர்கள், தென்னாட்டு மக்களால் 'துரோகிகள்' என்று அழைக்கப்படுவதற்கே அருகதையுடையவர்கள் என்பதை உணர்ந்து, பல நேர்மையாளர்களும் உண்மையை ஒப்பியிருக்கின்றனர்.

நாட்டவர் கண்களை இந்த அநீதியின் பேருருவத்தின் பக்கம் திருப்பி, அவர்களைச் சிந்திக்குமாறு தூண்டிய நற்பணியை நமது தி. மு. கழகம் தான் முன்னின்று நடத்தி வருகிறது.

இந்த அநீதிகளை உற்று நோக்குபவர்களுக்கு — ஊடுருவிப் பார்ப்பவர்களுக்கு, 'தென்னாட்டு அடிமைகளின் வாழ்வில் நீண்ட நெடுங் காலத்திற்கு இருள் சூழச் செய்வதில்தான் நமது மக்களின் வாழ்வு பிரகாசமாவது அடங்கியிருக்கிறது' என்ற வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் வஞ்சக நெஞ்சில் ஊறிப் பெருக்கெடுத்துக் கிடக்கும் கீழ்த்தரமான பேராசை உணர்வு தெளிவாகத் தெரியாமல் போகாது.

வடநாட்டவர் நமக்கு அநீதி இழைத்ததற்கு அவர்களது ஏகாதிபத்தியப் பேராசைதான் காரணம் என்று நாம் கூறுவது உண்மையாயில்லாவிட்டால், எப்போதும் 'யதார்த்த நிலை'யைக் கணக்கிலெடுத்தே விவகாரங்களை அலசும் சில 'இரணகளச் சூரர்'களான 'முற்போக்கு'வாதிகளும்கூட உண்மையை ஒப்பியிருப்பார்கள்.

தொடர்ந்தாற்போல் 'அபிவிருத்தித் திட்ட'ங்களில் தென்னவருக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியைக் கண்டிக்காமலிருக்கும் எவரும், விழிப்புப் பெற்றுவரும் தென்னாட்டவரின் கூரிய கண்களிலிருந்து தப்பிவிட முடியாது என்பதை நாம் கூறத் தேவை இல்லை.

ஆனால் தென்னாட்டில், குறிப்பாகத் தமிழகத்தில் ஆட்சியிலமர்ந்திருக்கும் காங்கிரசார், இந்த ஐந்தாண்டுத் திட்டம் பற்றி ஒரு நிலையில் நின்று கருத்தறிவிப்பவர்களாக இல்லாமல் பெரும் கபடவேடதாரிகளாக இருந்து வருகின்றனர் என்பதை மக்கள் சிந்தித்து உணர வேண்டும்.

ஐந்தாண்டுத் திட்டங்களை நாம நீள் பாளங்களாகப் பிளந்து, அவற்றில் புதைந்திருக்கும் இந்த அநீதிக்கு வெளிச்சமிட்டுக் காட்டியபோது, 'இல்லவே இல்லை; தென்னாடு புறக்கணிக்கப்படவே இல்லை' என்று பொய் பேசினார்கள், தென்னாட்டில் வடநாட்டவரின் பிரதம கங்காணிகளாக விளங்கும் இந்தக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள்!

பின்னர், 'முதல் திட்டத்தில் தான் ஏமாந்துவிட்டோம்; இப்போது ஏமாறமாட்டோம்' என்று வீரம் பேசினார்கள்!

வடநாட்டு எசமானர்களால் மூக்கறுபட்டுத் தேவபீடமாம் டில்லியிலிருந்து திரும்பியதும், 'உள்ளதைக் கொண்டு நல்லது செய்வோம்' என்று வேதாந்தம் பேச முற்பட்டார்கள்.

'வடநாட்டவருக்கு இந்தக் காமராசர் மந்திரி சபையினர், வெள்ளாட்டிகளாக—தொழும்பர்களாக விளங்குகிறார்கள்; மானமிழந்த கோழைகளாகக் காட்சிதருகின்றனர்' என்று கண்ட மக்கள், தங்களின் கண்டனக் குரலை வலுப்படுத்தியபோது, 'எசமானர்களிடம் முறையிட்டிருக்கிறோம்; இன்னும் கொஞ்சம் தரக் கெஞ்சியிருக்கிறோம்' என்று சமாதானம் கூற முற்பட்டனர்.

ஆனால் இன்று இவர்கள், கடந்த காலத்தில் மக்களின் நலன்களைக் காலடிப் புழுதியாக மதித்து, தாங்கள் பதவிகளில் ஒட்டிக் கொண்டு 'இன்ப நுகர்ச்சி'யிலேயே காலங் கடத்திவிட்டு, அநீதியின் உருவம் கண்முன் தெரிந்த பின்னும் அநீதி இழைத்த கொடியவர்களை 'நற்கருணை' வழங்கும் தேற்றரவாளர்கள் என்று கூறி, அவர்களின் பாதங்களைத் தொழுது கொண்டிருந்துவிட்டு, 'தீர்ப்பு நாள்' நெருங்கும்போது 'மீண்டும் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது' என்று பேச முற்பட்டிருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு கோவை நகரில் முதன் மந்திரி காமராசர், 'தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது' என்று ஓலமிட்டிருப்பதும், மந்திரி சுப்பிரமணியம் '18 தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஒன்று மட்டும்தானா தென்னாட்டிற்கு?' என்று அங்கலாய்த்திருப்பதும், தேர்தல் என்ற தீர்ப்பு நாள் நெருங்கும்போது மன்னிக்க முடியாத—கூடாத குற்றம் புரிந்துவிட்ட இந்தக் கொடியவர்கள், மக்கள்முன் மண்டியிட்டுப் பாடும் 'பாவசங்கீர்த்தனம்' என்பதைத் தவிர, வேறென்ன?

அந்த இடம் எங்கே?

ரஷ்யா அணு ஆயுதப் பரீட்சை நடத்தும் இடம் பற்றி ஒரு தகவல்

சோவியத் யூனியன் அணு ஆயுதப் பரீட்சைகளை இந்தியா, ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் இவற்றுக்கு வடக்கே தென்மேற்கு சைபீரியாவில் மீண்டும் நடத்த ஆரம்பித்துள்ளது என்று அமெரிக்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

'சுதந்திர தினம் கொண்டாட வடக்கிலிருந்து தலைவரை இறக்குமதி செய்வானேன்?'

'படி அரிசி பதினைந்தணு விற்பதுதான் சுதந்திரத்தால் மக்கள் காணும் பலனு?'

தோழியர் சத்தியவாணிமுத்து கேள்வி

"இந்த ஆண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்குக் காங்கிரசார், வடநாட்டிலிருந்து சென்னைக்கு ஒரு தலைவரை இறக்குமதி செய்திருந்தார்கள்.

"இறக்குமதி செய்த அந்தத் தலைவரை சென்னை நகர வீதிகளில் பவனி வரச்செய்து, மக்களின் வரிப் பணத்தில் பல இலட்சம் பாழடித்தார்கள்.

"குடியரசுத் தலைவர் தனது இருப்பிடத்திலிருந்து சுதந்திர தின விழா கொண்டாடுவதை விடுத்து, இங்கே வந்து விழா கொண்டாட வேண்டிய அவசியம் இப்போது என்ன வந்தது என்பதே நமக்குப் புரியவில்லை.

"இந்தத் தலைவர் 'ஏழை பங்காளர்' என்று கூறுகிறார்கள்; இது உண்மையா?

"இந்த ஏழை பங்காளருக்கு 160 அறைகள் கொண்ட மாளிகையாம்! அங்கே 300 வேலையாட்களாம்! எப்படியிருக்கிறது பார்த்தீர்களா, இந்த ஏழை பங்காளர்கள் நடத்தும் எளிய வாழ்க்கை?

"'சுதந்திரம் பெற்று விட்டோம்; ஒன்பதாண்டுகள் ஆகிவிட்டன—என்று கூறி ஆண்டுதோறும் விழா நடத்துகிறார்களே! இவர்களது 'சுதந்திரம்' நாட்டு மக்களுக்குத் தந்தது என்ன? எண்ணிப் பார்த்தார்களா?

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 640 கோடிவரை விவசாயத்திற்காக, உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காகச் செலவிட்டிருக்கிறோம்— என்று பெருமை பேசுகிறார்களே! என்ன பயன்? நாட்டில் அரிசி விலை 15-அணுவாக அல்லவா விற்றுக் கொண்டிருக்கிறது? 'அரிசி விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டிருப்பதுதான் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 640 கோடி விவசாயத்திற்குச் செலவிட்டதின் பயனு?' என்று கேட்கிறோம்.

"இவர்கள் கூறும் 'சுதந்திரம்' பெற்றதால் மக்கள் என்ன பயனைக் கண்டனர்?

"கோடிக்கணக்கான ரூபாய் வரி தராமல் இந்த நாட்டு முதலாளிகள் ஏமாற்றுகிறார்கள்; எவ்வளவு கோடி ரூபாய் ஏமாற்றுகிறார்கள் என்பதை இந்தக் காங்கிரஸ் நிர்வாகத்தில் உள்ள நிபுணர்களால் கண்டுபிடிக்க முடியவில்லையோ, அல்லது அவர்கள் கூறுவதில் நம்பிக்கை இல்லையோ தெரியவில்லை' வெளிநாட்டிலிருந்து— பிரிட்டனிலிருந்து ஒரு நிபுணரை வரவழைத்து, எத்தனை கோடி ரூபாய் வரி ஏமாற்றப்பட்டிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கக் கூறினார்கள். இந்த இலட்சணத்தில்தானே இருக்கிறது, காங்கிரஸ் மந்திரிகளின் நிர்வாகம்?"

என்று தோழியர் சத்தியவாணி முத்து அம்மையாரவர்கள், சென்னை புளியந்தோப்பு தி மு. கழகச் சார்பில் கடந்த 26-ந் தேதியன்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்!

கோவைக் குமரர் மீண்டும் குமுறுகிறார்

'18 தொழில் கல்லூரிகளில் தென்னாட்டிற்கு ஒன்றுதானு?'

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்தியாவில் ஆரம்பிக்கப்படவிருக்கும் 18 தொழில் நுணுக்கப் பயிற்சிக் கல்லூரிகளில், தென்னாட்டில் ஒரேஒரு கல்லூரிதான் அமைக்கப்படவிருக்கிறது; இது வருத்தத்திற்குரியதாகும்.

"தொழில் நுணுக்கக் கல்வியில் தென்னாடு வளர்ச்சியடைந்துள்ளதென்பதில் ஐயமில்லை; ஆனால், அத்திறமையை மேற்கொண்டும் வளர்த்துக்கொள்ளுவதற்குத் தடையாக அது இருக்கக்கூடாது.

"அத்தியாவசியமான பொருட்களில் பற்றுக்குறை ஏற்பட்டால் அவற்றை இறக்குமதி செய்துகொள்ளலாம்; ஆனால் தொழில் நுணுக்கக் கல்வியில் பயிற்சி பெற்றவர்களை அவ்வாறு இறக்குமதி செய்ய முடியாது."

—என்று, கோவைக்கு அருகிலுள்ள பெரியநாய்க்கன்பாளையத்தில் நடைபெற்ற தென் வட்டாரக் கல்வி மாநாட்டில், தொழில் நுணுக்கக் கல்வி சம்பந்தமான விவாதத்திற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் சென்னை நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் குறிப்பிட்டு மேலும் சொன்னார்:—

"மாகாணத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் இப்போது போதுமான அளவுக்கு ஆசிரியர்கள் இல்லை; ஆசிரியர்களுக்குக் குறைந்த அளவு சம்பளம் கொடுப்பதாலேயே இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது."

மே. வ. சர்க்காரின் புதிய நிலத் தீர்வைத் திட்டம்

5 லட்சம் விவசாயக் குடும்பங்கள் பயன்பெறுமாம்

கல்கத்தா, ஆக. 28—

மேற்கு வங்க சர்க்காரால் கொண்டுவரப்பட்ட நிலத் தீர்வையின் புதிய திட்டத்தின்கீழ் மேற்கு வங்கத்தில் சுமார் 5 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு ரூ. 1,87,00,000 வரை அனுகூலம் கிடைக்குமாம்.

இதுவரையிலும் ஜமீன்தார்களுக்குத் தானியமாகத் தீர்வைசெலுத்தி வந்த அக்குடியானவர்கள் இத்திட்டத்தின்கீழ் ஆண்டொன்றுக்கு, ஒரு ஏக்கருக்கு ரூ. 9 விகிதத்தில் ரொக்கத் தீர்வை செலுத்துவார்களாம்.

பழைய விகிதத்துடன் இப்புதிய விகிதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால், இது முந்தியதைவிட 80 சதவிகிதம் குறைவானதாகுமாம்.

கிழக்கு பாகிஸ்தானில் மீண்டும் கவர்னராட்சி?

டாக்கா, ஆக. 28—

கிழக்கு பாகிஸ்தானில் அரசியல் சட்டத்தின் விசேட அதிகாரத்தின்படி விரைவிலேயே கவர்னர் ஆட்சி ஏற்படுத்தப்படும் என்று கிழக்கு பாகிஸ்தான் முதலமைச்சர் அபு உசேன் சர்க்கார் அறிவித்திருக்கிறார்.

மேலும் கிழக்குப் பாகிஸ்தான் அரசு பீடத்திலமர்ந்துள்ள மந்திரிசபை தனது இராஜினாமாவை நாளை மாலையே கவர்னரிடம் சமர்ப்பித்துவிட வேண்டுமென்று அவர்களுக்குத் தாக்கீது கொடுக்கப்பட்டிருக்கிறது.

கைத்தறிகளைப் பதிவு செய்யும் வேலை ஒழுங்காக நடைபெறுகிறதாம்

பதிவு பெருத தறிகளுக்குக் கடன் உதவிகள் கிடையாதாம்

புதுடில்லி, ஆக. 28—

"நூல் தாராளமாக விற்பனையாகிறது; பதிவு செய்யப்படாத தறிகளுக்கு நூல் விற்கப்படுவதைத் தடுக்கும் உத்தேசம் எதுவும் இல்லை; ஆனால், கடன் மற்றும் அதுபோன்ற உதவிகளை அரசாங்கம் தரும்போது, அவை பதிவு செய்யப்பட்ட கைத்தறிகளுக்கு மட்டுமே கிடைக்கும்"

என்று மாநிலங்கள் சபையில் கைத்தறிகளைப் பதிவு செய்து கொள்ளவேண்டுமென்ற அரசாங்கக் கொள்கை பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில், இந்திய அரசாங்க உபயோகப் பொருள்கள் உற்பத்தித் துறை அமைச்சர் நித்தியானந்த கனுங்கோ குறிப்பிட்டுவிட்டு மேலும் சொன்னார்:—

"கைத்தறிகளைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும் என்ற அரசாங்க முடிவுக்கு சில நெசவாளர்களும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் எதிர்ப்புக்காட்டின; எனினும், மாகாணங்களில் கைத்தறிகளைப் பதிவு செய்யும்வேலை ஒழுங்காக நடைபெற்று வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன,"

சில துணைக் கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசுகையில், இந்தியத் தொழில்-வணிகத் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியதாவது:—

"துணிப் பற்றுக்குறை ஏற்பட்டால் அந்தச் சமாளிக்கும் முறையில் துணி உற்பத்தியை ஒழுங்காக திட்டமிடுவதை நோக்கமாகக் கொண்டே கைத்தறிகளைப் பதிவு செய்யவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. தற்போது சரியான புள்ளி விவரங்கள் இல்லை இதுவரை பதிவு செய்து கொள்வது சம்பந்தமான அரசாங்க உத்தரவுக்குத் தனிப்பட்ட நெசவாளர்களே பெரிதும் எதிர்த்துள்ளனர்.

"பதிவு செய்து கொள்ளாதவர்கள்மீது நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் இல்லை தொடக்க கால கணக்குகள் எடுக்கப்பட்டு முடிந்த பிறகு பதிவு செய்யும் அதிகாரிகள் வீடுவீடாகச் சென்று கைத்தறிகளைப் பதிவு செய்வார்கள்."

அமிர்தசரஸ் காங்கிரசு மாநாடு

நிகர வருமானம் ரூ. 1,75,000

ஜலந்தர், ஆக. 29—

அண்மையில், அமிர்தசரசில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் நிகர வருமானமாக ரூ 1 75,000 கிடைத்தது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதில், ரூ. 67,000 அகில இந்திய காங்கிரசிற்குத் தரப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

மருத்துவக் கல்லூரியில் சேர

311 பெண்கள் மனு செய்தனராம்

சென்னை, ஆக. 28—

மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கு மாநிலம் முழுமையிலும் 311 பெண்கள் மனுப் போட்டனர் என்றும், அவர்களில் 73 பேர் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்றும் மாநில மேல் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 31-பேர் மனுப் போட்டதில் அவர்கள் அனைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும், பின்தங்கப்பட்ட வகுப்பினர் 473 பேர் மனுச் செய்ததில் 143 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்றும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறப்பட்டது.

மருத்துவப் பள்ளியை

மருத்துவக்கல்லூரியாக்கமானியம்

மத்திய சர்க்கார் அளிக்கிறது

புதுவை, ஆக. 27—

புதுவையிலுள்ள மருத்துவப் பள்ளியை மருத்துவக் கல்லூரியாக மாற்றியமைக்க மத்திய சர்க்கார் ரூ. 25 இலட்சம் அனுமதித்திருக்கிறதாம்.

புதுவையில் இக்கல்லூரியே மருத்துவ மத்திய நிறுவனமாகக் கருதப்பட்டு, பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் போதனை நடைபெறும் என்றும், கல்வித்துறைகளில் பிரெஞ்சு முறையின் அம்சங்கள் பாதுகாக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

புதிய கல்லூரிக்குத் தேவையான அளவில் புதிய கட்டிடங்களும் கட்டப்படுமாம்!

இக்கல்லூரியில் பயிலுவதற்கென் அடுத்த மாதத்தில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவர் என்றும், கணிதம், பௌதிகம், இரசாயனம், இயற்கை விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது மூன்றில் இண்டர்மீடியட் வகுப்பில் தேர்வு பெற்றவர்களே இதில் அனுமதிக்கப்படுவர் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறை ஆண்டில் இக்கல்லூரியில் மொத்தம் 12 மாணவர்கள் அனுமதிக்கப்படுவராம்.

இந்தியப் பல்கலைக் கழகங்களில் தரப்படும் எம். பி. பி. எஸ். படிப்பிற்குச் சமமாக 6½ ஆண்டுப் பயிற்சி இக்கல்லூரியில் தரப்படுமாம்.

புகையிலை போடுவதால் புற்றுநோய் ஏற்படுகிறதா?

'வெற்றிலைபாக்குடன் காரமான புகையிலையைப் போடுவதால் வாயில் புற்றுநோய் உண்டாவதாகக் கூறப்பட்டது உண்மைதானா?' என்றும், 'அது உண்மையாக இருக்குமானால் சர்க்கார், புகையிலை போடுபவர்களை எச்சரித்துள்ளதா?' என்றும் மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மத்திய சுகாதார அமைச்சர் திருமதி அமிருதகௌரி அவர்கள், இவ்விவரம் குறித்துப் பம்பாயிலுள்ள இந்திய புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகம் பரிசீலனை நடத்தி வருவதாகவும், இன்னும் ஆராய்ச்சி முடிவுறாததால், இது குறித்துத் தற்போது எதுவும் கூறுவதற்கில்லை என்றும், எனவே இப்போதே மக்களை எச்சரிப்பது உசிதமானதல்ல என்றும் பதிலிறுத்திருக்கிறார்.

சைக்கிள் டயர் இறக்குமதி

அந்நிய நிறுவனத்திற்கு ஏகபோக உரிமையா?

மக்கள் சபையில் கேள்வி

புதுடில்லி; ஆக. 28—

"சைக்கிள் டயர் இறக்குமதியில் ஒரு அந்நிய நிறுவனத்துக்கு ஏகபோக உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதா?" என்று, மக்கள் சபையில் உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர் கனுங்கோ, அதிக மலிவான விலையில் அவற்றை இறக்குமதி செய்கின்ற நிறுவனம் ஒன்றிற்கு, 'லைசென்ஸ்' வழங்கப்பட்டிருக்கிறது என்று பதில் தந்திருக்கிறார்.

மேலும் அடுத்த சில வார காலத்திற்குள்ளாகவே, இந்தியாவில், சைக்கிள் டயர்களின் விலை குறையலாம் என்றும் அந்த அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவிற்குச் சீன அரிசி

சீனாவிலிருந்து 60,000 டன் அரிசி வாங்கச் சீன சர்க்காருடன் இந்திய சர்க்கார் ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அரிசிக்கு விலை, இந்திய ரூபாய்களில் தரப்படும் என்றும், இந்தியாவிலிருந்துத் தனக்கு வேண்டிய பொருள்களை இப்பணத்தைக்கொண்டு சீனா வாங்கிக்கொள்ளும் என்றும் கூறப்படுகிறது.

பர்மாவிற்குள் சீனத் துருப்புகள்

விரட்டுவதற்கு எதிர்க் கட்சித் தலைவர் யோசனை

இரங்கூன், ஆக. 28—

பர்மா சர்க்கார் சீனாமீது போர் தொடுக்க வேண்டுமென்றும், பர்மியப் பிரதேசத்திற்குள் ஊடுருவியுள்ள சீனத் துருப்புக்களை திரும்பப்பெறுவதற்கு ஐ நா. சபையை வற்புறுத்த வேண்டுமென்றும் பர்மிய எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருக்கிறார்.

சீன சர்க்காருடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதில் தமக்கு நம்பிக்கையில்லை என்றும், ஆனால் சீனத்துருப்புக்களை விரட்ட உடனடி நடவடிக்கைகளை பர்மா மேற்கொள்ள வேண்டுமென்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

மலாயாவில் பிரிட்டிஷ் இராணுவத தளங்கள்

30 ஆண்டுகளுக்குக் குத்தகையாம்

கோலாலம்பூர், ஆக. 28—

மலாயாவில் பிரிட்டன் இராணுவ தளங்கள் கட்டிக்கொள்ள 30 ஆண்டுகளுக்குக் குத்தகை வழங்குவதென இங்குள்ள வம்ச பரம்பரையில் வந்த இராஜாக்கள் அனைவரும் முடிவு செய்திருக்கின்றனராம்.

மலாயா சுதந்திரம் பெற்ற பின்னர், அங்கு காமன்வெல்த் 'ரிசர்வ்' படை வைத்துக்கொள்ள பிரிட்டனுக்கு அனுமதி அளிக்கும் இந்த ஒப்பந்தம் இந்த ஆண்டு கடைசிக்குள்ளாக இலண்டனில் கையெழுத்திடப்படுமாம்.

பொதுக் கல்விப் பாடங்கள்

எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் கற்றுத் தரப்பட வேண்டுமெனச் சிபாரிசு

புதுடில்லி, ஆக. 27—

இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட பொதுக் கல்வி பற்றிய ஆராய்ச்சிக் குழு, நாட்டிலுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் பொதுக் கல்விப் பாடங்கள் கற்றுத் தரப்பட வேண்டுமென்று சிபாரிசு செய்துள்ளதாம்.

பட்டம் பெறும் மாணவர்கள் அனைவரும், பட்டம் பெறுவதற்கு முன்னர், பொதுக் கல்விப் பாடங்களில் ஒரு பரீட்சை எழுதி அதில் தேர்வுபெற வேண்டுமென்பது ஒரு நிபந்தனையாக்கப்பட வேண்டுமென்று அக்குழு சிபாரிசு செய்திருக்கிறது.

இறுதி இலட்சியமான முக்கியத் திட்டம், உடனடியாக ஆரம்பிக்கக் கூடிய மாற்றுத் திட்டம் ஆகிய இரு திட்டங்கள் மூலம் பொதுக் கல்விப் பாட போதனையை அமுலுக்குக் கொண்டு வரலாமென்று அக்குழு யோசனை கூறியிருக்கிறது.

இறுதி இலட்சியமான முக்கியத் திட்டத்தில் இயற்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய துறைகளில் அடிப்படைப் படிப்பும், செய்திப் போக்குவரத்து முறையில் பயிற்சியும் அடங்கும். தொழில் கல்வி இல்லாத மற்றப் படிப்புகளில் பட்டம் பெறும் எல்லா மாணவர்களுக்கும் மேற்கண்ட பாடங்கள் கட்டாயமாகும். மூன்று ஆண்டுப் பட்டப் படிப்பிற்கு அளிக்கப்படும் காலத்தில் மூன்றில் ஒரு பொதுக் கல்விப் பாடங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

இரண்டாவது திட்டமான மாற்றுத் திட்டத்தின்கீழ் பட்டப் படிப்பின் முதல் ஆண்டிலும் இரண்டாவது ஆண்டிலும் வாரம் ஒன்றுக்கு 6 'பீரியட்'கள் பொதுக் கல்விப் பயிற்சிக்கென ஒதுக்கப்பட வேண்டும் என்று அக்குழு சிபாரிசு செய்திருக்கிறது.

மேலும் இப்பொதுக் கல்வித் திட்டம் வெற்றிகரமாக அமுல் செய்யப்படுவதற்கு நூல் நிலையங்கள், ஆராய்ச்சிச்சாலைகள் போன்ற கல்வி போதனைக்கான துணை ஏற்பாடுகளும் விரிவுபடுத்தப்பட வேண்டுமென்றும் அக்குழு சிபாரிசு செய்திருக்கிறது.

1955-56-ம் ஆண்டில் இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு ஏற்றுமதியான பொருள்களின் மொத்த மதிப்பு சுமார் ரூ. 12,40,00,000 என்றும், அதே ஆண்டில் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான பொருள்களின் மொத்த மதிப்பு ரூ. 9,58,00,000 என்றும் மக்கள் சபையில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் நிதி

திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் நன்கொடை

14—8—56 மாலை 7 மணிக்கு, பழனி வட்டம் நெய்க்காரப்பட்டி தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழியர் சத்தியவாணி முத்து அம்மையாரிடம் தேர்தல் நிதிக்காக விஜயகுமார் மில் திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சார்பில் 132 அணுக்கள் கொண்ட பணமுடிப்பு அளிக்கப்பட்டது.

செயற்கை இரப்பர் உற்பத்தித் தொழிற்சாலை

இந்தியாவில் நிறுவப்படும்?

இந்தியாவில் ஒரு செயற்கை ரப்பர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவுவது பற்றி டில்லி சர்க்கார் தீவிரமாக யோசித்துக் கொண்டிருக்கிறார்களாம்!

போத்தனூரிலா ஒரு தொழிற்சாலை?

'சிக்னல்' கருவிகள் தயாரிக்கத் திட்டம்?

புதுடில்லி, ஆக. 28—

இரயில்வேக்களில் தேவைப்படுகின்ற 'சிக்னல்' கருவிகளைத் தயாரிக்க, தென் பிராந்திய இரயில்வேயில் போத்தனூரில் ரூ. 26 இலட்சம் செலவில் ஒரு புதிய தொழிற்சாலை நிறுவப்படுமாம்.

அத்தொழிற்சாலை இன்னும் இரண்டாண்டுகளில் வேலை துவங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'மெட்ரிக்' முறையில்

நிறுத்தல், முகத்தல் அளவைகள்

மக்கள் சபையில் மசோதா

புதுடில்லி, ஆக. 28—

'மெட்ரிக்' முறையில் நிறுத்தல், முகத்தல் அளவைகளை இந்தியாவில் ஏற்படுத்தச் செய்வதற்கான மசோதா ஒன்றை மக்கள் சபை, கூட்டுப் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட்டிருக்கிறது.

இந்த முறையைப் புகுத்துவதால் இடைக் காலத்தில் சமாளிக்க வேண்டியிருக்கும் கஷ்டங்களைத் தாம் குறைவாக மதிப்பிடவில்லை என்றும், பிரச்சினைகளையெல்லாம் சீக்கிரமாகவே சமாளித்து விடுவதுதான் நல்லது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

இந்த மாதிரியான 'மெட்ரிக்' அளவைகளை அமுலுக்குக்கொண்டு வர தாய்லாந்தில் 13 ஆண்டுகளும், இத்தாலியில் 10 ஆண்டுகளும், செக்கோஸ்லாவேக்கியாவிலும் துருக்கியிலும் 3 ஆண்டுகளும் பிடித்தன என்றும், இந்தியாவைப் பொறுத்தவரையில் 10 முதல் 15-ஆண்டுகளில் இம்முறை அமுல் செய்யப்பட்டு மாறுதல் அடைவது சாத்தியமே என்றும் கூறியிருக்கிறார்.

வளரும் விஞ்ஞானமும்—விரிவடையும் உலகமும்!

பெர்க்லே, ஆக. 27—

உலகம் மிக அதிக வேகத்தில் விரிவடைந்துகொண்டே வருவதாக, இங்கு நடைபெற்ற அமெரிக்க வானசாஸ்திர சங்கக் கூட்டம் ஒன்றில் பேசிய பேராசிரியர் பாம் என்ற விஞ்ஞானி குறிப்பிட்டிருக்கிறார்.

பாலோமர் என்னும் இடத்தில் உள்ள பிரம்மாண்டமான தூர திருஷ்டிக் கண்ணாடி (டெலஸ்கோப்) மூலம் தாம் ஆராய்ச்சி செய்து பார்த்ததில், வெகு தூரத்திலுள்ள நட்சத்திரக் கூட்டங்கள் மிக வேகமாக நகர்ந்து கொண்டிருப்பதாகவும், அவற்றின் வேகம் விநாடி ஒன்றுக்கு 75,000 மைல்கள் என்று தெரிவதாயும் அவர் கூறினாராம்.

டில்லியிலிருந்து இன்னும் பதில் இல்லையாம்

சென்னை, ஆக. 27—

சென்னை—ஆந்திர மாநிலங்களிடையே உள்ள எல்லைத் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கென எல்லைக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்ற சென்னை சர்க்காரின் கோரிக்கைக்கு இன்னும் மத்திய சர்க்காரிடமிருந்து எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை என்று சென்னை மேல்சபையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்திருக்கிறார்.

இப்பிரச்சினை மத்திய சர்க்காரின் கவனத்திலிருந்து வருவதாகத் தகவல் தரப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தாராம்.

திருமணங்கள்

திருக்கழுக்குன்றம் தி. மு. கழகத் தோழர் டி. சி. சபாபதி—தோழியர் ராசாத்தி திருமணம், 26—8—56 காலை 8-30 மணிக்கு, திருக்கழுக்குன்றம் வன்னியர் சத்திரத்தில், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. எல். எ. வகாப், க. குருசாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசியபின் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் சீர்திருத்தத் திருமணம் என்பது குறித்து விவரித்தும், மணமக்களை வாழ்த்தியும் பேசினார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அளிக்கப்பட்டது.

* * *

19—8—56-ல், விருத்தாசலத்திற்கு அடுத்த பரவலூரில் தோழர் பி. பச்சமுத்து—தோழியர் இராயம்மாள் திருமணம், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., சி. முனுசாமி, மற்றும் பலர் பேசினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பாக ரூ. 5 தரப்பட்டது.

* * *

19—8—56-ல்; தோழர் ப. உ. சண்முகம் தலைமையில் நடைபெற்ற வ. ஆ. மாவட்டம் சேர்ணூர் தி. மு. கழகத் தோழர் மா. பிச்சாண்டி—தோழியர் இந்திராணி திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

19—8—56 காலை 9 மணிக்கு தெ. ஆ. மாவட்டம், அரசம்பட்டு தோழர் இராமு-தோழியர் உண்ணாமலை திருமணம் தோழர் கே. எல். முனியப்பன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டி. பி. கேசவன், க. நாச்சியப்பன் ஆகியோர் சீர்திருத்தத் திருமணம் பற்றி விளக்கி வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

திருக்கழுக்குன்றம் அடுத்தத் தேசுமுகப்பேட்டையில் தோழர் சு. ஆட்சிலிங்கம்—தோழியர் மா. அபுருபம் திருமணம் தோழர் க. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரத்தினவேலு, திருநாவுக்கரசு, மு. இராசமாணிக்கம், சு. குருநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

26—8—56ல் தெ.ஆ மாவட்டம் வடக்கனந்தல் தோழர் மருதைமுத்து—தோழியர் வள்ளியம்மை திருமணம் நடைபெற்றது. இத நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

பிறப்பு

கள்ளக்குறிச்சி தி. மு. கழகத் தோழர் கே. வேணு அவர்களின் துணைவியார் 25—8—56ல் ஒரு பெண் மகவுக்குத் தாயானார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டுள்ளது.

['நம் நாடு' இதழுக்கு அளிக்கப்பட்ட நன்கொடைத் தொகைகள் அனைத்தும் வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்]

மறைவு

சேலம் நகர 18-வது வட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் எஸ். முத்துப் பழனி அவர்களின் தந்தையார் தமது 111-வது வயதில் 22-8-56ல் இயற்கை எய்தினார். மறுநாள் மாலை 5 மணிக்கு, ஏராளமான தோழர்கள் வந்திருந்து, சவ இறுதிச் சடங்கு நடத்தினர்.

****

தலைமை நிலையச் செய்தி:

மத்திய செயற்குழு

(Working Committee)

9—9—56 ஞாயிறு பிற்பகல் 3-மணிக்கு, சென்னை —இராயபுரம் 'அறிவகம்'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

****

தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் அண்ணா

சென்னை, ஆக. 30—

சென்னை—வெள்ளாள தேனும் பேட்டையில், தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் கடந்த 27-ந் தேதியன்று மாலை 6 மணியளவில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இராபர்ட் இயக்கப் பாடல்கள் பாடினார்.

கழகச் செயலாளர் டேனியல் முன்மொழிய, தோழர் அகமழகன் வழிமொழிய தோழர் ஆ. கோ. அரசு கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தலைவர் முன்னுரைக்குப் பின், தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வேண்டுவது குறித்தும், தமிழ் நாடு சுதந்திரத்தோடு வாழ வேண்டுவது குறித்தும் பேசினார்.

பின்னர் தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில், தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக அண்ணா அவர்களிடம் ரூ. 50 தரப்பட்டது.

இறுதியாக அண்ணா அவர்கள், சில குழந்தைகளுக்குப் பெயரிட்டுவிட்டு, அரியதோர் கருத்துரை வழங்கினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்தில் ஏராளமான தாய்மார்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

(ந கி.)

சென்னையில் அண்ணா முழக்கம்...

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

ஆனால், காமராசருக்கு என்ன இருக்கிறது? 'என் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது'—என்று சொல்லிக்கொள்ள!

"காமராசர் மூடியது ஒன்று! திறந்தது ஒன்று! மூடியது—டிராம் போக்குவரத்து நிறுவனத்தை! திறந்தது—ஏராளமான போலீஸ் நிலையங்களை! இதைத் தவிர, காமராசர் செய்தது என்ன?"

—என்று அண்ணா அவர்கள், கடந்த கிழமையில் சென்னை—புளியந்தோப்பு தி. மு. கழகக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டுவந்து, கழகக் கருத்துக்களைக் கேட்கிறார்கள்; மக்கள் காட்டுகிற உற்சாகம், ஆர்வம் இவைதான், கழகம் தேர்தலில் ஈடுபடுவதற்கான மூலகாரணமாகும். கழகத்திடம் மக்கள் காட்டும் இந்த ஆதரவு மாற்றாருக்கு மருட்சியையும், நமக்கு நம்பிக்கையையும் தருகின்றன. 'தோல்வியுறுவோமோ?' என்று மாற்றாரை மருளச் செய்கிற இந்த மக்களின் ஆதரவுதான் நமக்கு மகிழ்ச்சிதரும் வெற்றியைத் தேடித்தர முடியும்.

"மக்களின் ஆதரவிற்கும் அன்பிற்கும் பாத்திரமான கழகத் தோழர்கள், எதிர்நோக்கியிருக்கிற தேர்தல் காலத்தில் வெகு அருமையாகப் பாடுபட்டாகவேண்டும்.

"காங்கிரசிற்குக் கிடைக்கக்கூடிய ஊழியர்கள், காங்கிரஸ் தரக்கூடிய பணத்திற்காக வேலை செய்பவர்களாக இருக்கலாம்; ஆனால் கழக ஊழியர்களுக்கு நன்றாகத் தெரியும்—தாங்கள் வேலை செய்வதற்குப் பணம் ஏதும் கிடைக்காது என்பது! கழகத் தோழர்கள் எல்லாம் ஒரு மகத்தான இலட்சியத்திற்காகப் பாடுபடுபவர்கள் என்பதால், வரப்போகும் தேர்தலில் மிகுந்த ஆர்வத்தோடு பணியாற்றுவர் என்பதில் சந்தேகம் இல்லை.

"கழகம் கடந்த எட்டாண்டுகளில், மக்களின் நல்லாதரவையும் அன்பையும் பெறத்தக்க வகையில் திறம்படப் பணியாற்றி வந்திருக்கிறது.

"ஆளும் கட்சியினர் கொண்டுவரக்கூடிய சட்டங்கள், திட்டங்கள் இவற்றை எல்லாம் நுணுகி ஆராய்ந்து அவற்றின் நன்மை தீமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, நன்மையைப் பாராட்டி தீமையைக் கண்டித்து, மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டுவந்திருக்கிறது.

"காங்கிரஸ் ஒரு திட்டம் பற்றி நினைக்கிறது என்று தெரிந்ததுமே நாம், அத்திட்டத்தின் விளைவுகளை—நன்மை தீமைகளை ஆராய்ந்து, மக்களுக்கு விளக்கிவந்திருக்கிறோம்.

"சர்க்கார் கொண்டுவருகிற திட்டங்களையும் சட்டங்களையும் ஆய்ந்து, அவற்றில் இன்னின்ன குறைகள் இருக்கின்றன எனக் கண்டு, அவற்றை எடுத்துச் சொல்லுவது ஒரு கட்டம்; அடுத்தாற்போல, திட்டங்களும் சட்டங்களும் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில், இப்படி இப்படித் திருத்தப்பட வேண்டும் என்று எடுத்துரைப்பது மற்றொரு கட்டம்.

"முதல்கட்ட வேலையை கழகம், கடந்த காலத்தில் மிகத்திறம்படச் செய்திருக்கிறது என்பதை நல்லோர் அனைவரும் ஒப்புவர்.

"நாம், வேறு சிலரைப்போல சர்க்காரின் ஒரு திட்டத்தை முதலில் தீது என்பதும், பின்னர், அது நல்லதுதான் என்பதுமான முறைகளை மாற்றிக் கொள்ளும் வேலைகளில் ஈடுபட்டதில்லை.

"கம்யூனிஸ்டுகள் — அவர்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை—சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தை, 'தீதான திட்டம்' என்று பேசி வந்தார்கள்; பின்னர் 'இது நல்ல திட்டம்தான்' என்று பேசுகிறார்கள். இதற்குக் காரணம்—நான் நினைக்கிறேன்—திட்டங்களையும் சட்டங்களையும் இங்குள்ள கம்யூனிஸ்டுகள் ஆராய்வதில்லை; இவர்களுக்காக வேறு யாரோ ஆராய்கிறார்கள்.

"ஆனால் தி. மு. கழகம் அப்படிப்பட்ட நிலையிலிருப்பது அல்ல; கண்முன்னாலேயே பொருள்களைத் தயாரித்து சுடச்சுடத் தரும் சிறு சிற்றுண்டிச் சாலையைப்போல கழகம் தனது கொள்கைகளையும் இலட்சியங்களையும், இங்குள்ள மக்களின் முன்னிலையிலேயே உருவாக்கித் தருவதாகும். கழகத்திற்காக விஷயங்களை வேறெவரும் ஆராய்ந்து கூறுவதில்லை.

"முதல்கட்ட வேலையை கழகம் திறம்படச் செய்து வந்திருப்பது குறித்துக் குறிப்பிட்டேன். இப்போது இரண்டாவது கட்ட வேலையைக் கழகம் மேற்கொள்ளப் போகிறது. அந்த வேலையைச் செய்வதற்குத்தான் சட்டசபைக்குச் செல்லவிருக்கிறது கழகம்.

"கழகம், தனது இலட்சியத்தை அடைவதற்காக மேற்கொள்ளுகிற வேலைகள் எல்லாம், தமிழரின் பழம்பெரும் போர்த்தந்திர முறைகளைப் போன்றவைதான்.

"'சட்டசபைக்குச் செல்வது திராவிடநாடு பெறுவதற்காகவா?' என்று சிலர் கேட்கிறார்கள்; திராவிடநாடு பெறுவதற்காக சட்டசபையை மட்டும் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரே களம் என்று கருதவில்லை. 'திராவிட நாடு பெறுவதற்கான பல்வேறு களங்களுள் சட்டசபையும் ஒன்று' என்றுதான் தி. மு. கழகம் கருதுகிறது.

"நாம் சட்டசபைக்குச் செய்வதால் மேலும் மேலும் அதிகமான மக்களுக்கு ஆர்வம் கிடைக்கிறது. மாற்றாருக்கு நம்மைப் பற்றிய அறிவு கிடைக்கிறது. உலகத்திற்கு நமது இலட்சியம்—திராவிட நாடு என்ற முழக்கம் கேட்கும். இதுபோன்ற காரணங்களுக்காகத்தான் நாம் சட்டசபை செல்கிறோம்.

"சட்டசபையில் இப்போது நம்மவர்களாக—நமது ஆதரவு பெற்றவர்களாக உள்ள டி. சண்முகம் போன்ற எம். எல். ஏ.-க்கள் ஏதாவது பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது, '......இப்படி எல்லாம் நாம் கஷ்டப்படுகிறோம்; இதனால்தான் திராவிட நாடு வேண்டுமெனக் கேட்கிறார்கள்,' என்று கூறிவிட்டு உட்காருகிறார்கள். கழகம் சட்டசபைக்குள் சென்றால், திராவிட நாடு வேண்டுமென்பதற்கான காரண காரியங்களை எல்லாம் உலகறிய எடுத்துரைக்க முடியும்.

"உலகத்தவர் நம்மைப் பற்றி அளவெடுப்பது எதைக்கொண்டு?

"நாம் இன்று கூறுகிறோம்—'கழகத்தில் இலட்சம் உறுப்பினர்கள் உள்ளனர்; 1,500 கிளைகள் இருக்கின்றன; இலட்சக்கணக்கான மக்களின் ஆதரவு கழகத்திற்கு இருக்கிறது'—என்று! ஆனால், உலகத்தவர் இதைக் கேட்டதும் அப்படியே நம்பிவிட மாட்டார்கள்.

"ஜனாப் ஜின்னா, 'பாகிஸ்தான் வேண்டும்' என்று குரல் கொடுத்தபோது, காஷ்மீரில் உள்ள முஸ்லீமும், இங்கே தென்கோடியில் காயல் பட்டணத்தில் உள்ள முஸ்லீமும் அந்தக் குரலை எதிரொலிக்கத்தான் செய்தார்கள்; என்றாலும், பாகிஸ்தான் வேண்டும் என்ற குரல் சட்ட மன்றங்களில், தேர்தலில் நின்று வெற்றிபெற்ற முஸ்லீம் லீக் கட்சியினரால் எழுப்பப்பட்டபோதுதான் உலகம், பாகிஸ்தான் பிரச்சினையின் பக்கம் கண்ணைத் திருப்பியது.

"அதுபோலத்தான், திராவிட நாடு என்ற இலட்சியம் இலட்சக்கணக்கான மக்களின் இதயகீதமாகியிருந்தாலும், அந்த இலட்சியம் சட்டசபையில் ஒலிக்கும்போதுதான், உலகம் நம்மைப் பற்றி அளவிடுவது சாத்தியமாகும், இன்றைய அரசியல் நிலையில்!

"உலகம், 'இந்தியா என்பது ஒரே நாடுதான்; அது முழுவதுமாக ஜவகர் கையில்தான் இருக்கிறது' என்று நம்பிக்கொண்டே இருக்கும்; நாம் இங்கே 'திராவிட நாடு, திராவிடருக்கே' என்று சட்ட மன்றங்களுக்கு வெளியே இருந்துகொண்டே மக்களிடத்தில் பிரச்சாரம் செய்யும் வேலையை மட்டும் செய்துகொண்டிருப்போம் என்றால் எப்படி முடியும்?"

திருவண்ணாமலைக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் வருகை

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் **2-9-56** அன்று திருவண்ணாமலைக்கு வர இசைவு தந்துள்ளார்.

கழகக் கூட்டம்

★

குமணநகர்:
திருவள்ளுவர் திடலில்
1—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: ப. நாராயணன்
பேசுபவர்: சி. பி. சிற்றரசு

★

நடுவிற்பட்டி:
(எட்டையபுரம்)
முத்தாலையம்மன் மைதானத்தில்
1—9—56 இரவு 7 மணிக்கு
தலைவர்: ப. பச்சை
பேசுபவர்: எஸ். முத்து

★

காவேரிப்பாக்கம்:
முனுசாமி முதலி ரைஸ்மில் மைதானம்
31—8—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: மு. கண்ணப்பன்
பேசுவோர்:
ஏ. எல். சி. கிருட்ணசாமி
வே. அ. இளஞ்செழியன்

★

பழையபாளையம்:
1—9—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. பி. ராமச்சந்திரன்
பேசுவோர்:
ஏ. எல். சி. கிருட்ணசாமி
வே. அ. இளஞ்செழியன்
அ. லோகநாதன்

தேசீயத் தொண்டர் படை மசோதா

மக்கள் சபையில் நிறைவேற்றம்

புதுடில்லி, ஆக. 28—

பொது மக்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கும் தேசீயத் தொண்டர் படை ஒன்றை ஏற்படுத்தும் நோக்கங்கொண்ட தேசீயத் தொண்டர் படை மசோதாவை டில்லி மக்கள் சபை நிறைவேற்றியிருக்கிறது.

இந்தப் படையில் 18 முதல் 40 வயது வரையுள்ள திடகாத்திரமான ஆண்கள் அனைவரும் சேரலாமாம்.

மேலும், இப்படைகளில் ஆண்டொன்றுக்கு 1,00,000 பேருக்கு பயிற்சி அளிப்பது தற்போதைய இலட்சியம் என்றும், ஆனால் பயிற்சியை விரிவுபடுத்தத் தடை எதுவும் கிடையாது என்றும், பாதுகாப்பு அமைச்சர் டாக்டர் கட்சு அறிவித்திருக்கிறார்.

ஒரு மாத காலத்திற்குப் பயிற்சி முகாம்கள் நடைபெறுமாம். மொத்தம் நாடு முழுமையிலும் 250 முகாம்கள் இருக்குமென்றும், அவை ஒவ்வொன்றிலும் 500 பேருக்குப் பயிற்சி தரப்படும் என்றும் கூறப்பட்டது.

தமிழ்நாட்டிற்கு மேலும் ஒரு மருத்துவக்கல்லூரி

சென்னை, ஆக. 28—

காரைக்குடி, அல்லது வேறு எங்காவது ஒரு இடத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி நிறுவ டாக்டர் அழகப்ப செட்டியார் கல்லூரி நிறுவனத்தார் தயாராக இருப்பதாகவும், தங்களுக்குச் சர்க்கார் உதவி தேவை என்று கேட்டிருப்பதாகவும், ஆனால் இது குறித்து இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சென்னை மேல் சபையில் கேள்வி நேரத்தின் போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், கோவையில் ஒரு நபரின் உதவியுடன் மருத்துவக் கல்லூரி ஒன்று ஏற்படுத்துவது குறித்துச் சர்க்கார் யோசனை செய்து வருவதாகவும் சுகாதார அமைச்சர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

அகில இந்திய அடிப்படையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மத்திய சர்க்கார் மருத்துவக் கல்லூரிகள் நிறுவ உத்தேசித்திருப்பதால் சென்னை சர்க்கார் நகல் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்த இரு புதிய மருத்துவக் கல்லூரிகள் நிறுவுவது பற்றிய யோசனை கைவிடப்பட்டது என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

புதுடில்லி, ஆக 30—

'நிதி நிலைமை ஒழுங்காக இல்லாத இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் சம்பந்தமாகக் கணக்கு மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன' என்று, ரெவினியூ-சிவில் செலவின மந்திரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

31—8—56 மாலை 6-மணிக்கு, சென்னை-பிராட்வே, எண் 4-88, 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் து. தமிழ்ச்செல்வன் தலைமையில் 'அரசும்-மக்களும்' எனும் தலைப்பில், கழகத் தோழர்கள் பலர் பேசுவர்.

விதி இயற்றுவது அவசியமில்லையாம்!

சர்க்கார் சிப்பந்திகள் மதுபானங்களைப் பரிமாறலாமா?

புதுடில்லி, ஆக. 30—

'உத்தியோகபூர்வமான விருந்துகள் அல்லது ஓரளவு உத்தியோகபூர்வமான விருந்துகள் ஆகியவற்றில் சர்க்கார் சிப்பந்திகள் மதுபானங்களைப் பரிமாறக் கூடாதென்றும், தனிப்பட்ட விருந்துகளிலும் சாத்தியமானவரையில் அவர்கள் அவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும் உத்திரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன' என்று, உள்நாட்டு அமைச்சர் பி. என். தத்தார் மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

'இது சம்பந்தமாக சர்க்கார் சிப்பந்திகளுக்கான 'சேவை விதி'களில் ஒரு விதி இயற்றுவது அவசியம் இல்லை என்பதாக சர்க்கார் கருதுகின்றனர்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

1,42,860 டன் உணவுத்தானிய இறக்குமதி

புதுடில்லி, ஆக. 30—

நடப்பு மாதத்தில் பல்வேறு இந்தியத் துறைமுகங்களில் இதுவரை, மொத்தம் 1,42,860 டன் கோதுமையும் அரிசியும் வந்து சேர்ந்திருக்கிறது. இதில் 49,615 டன் கோதுமை ஆஸ்திரேலியாவிலிருந்தும், 68,150 டன் அமெரிக்காவிலிருந்தும் வந்திருக்கிறது.

சுத்தமான உப்பைத் தயாரிக்கவில்லையாம்

லைசென்சுதாரர்கள் மீது சர்க்கார் நடவடிக்கை

புதுடில்லி, ஆக. 30—

'சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி சுத்தமான தரமுள்ள உப்பைத் தயாரிக்காததற்காக 1955-ல் 835 லைசென்சுதாரர்கள் மீதும், 1956 ஜூன் இறுதி வரையில் 1,049 லைசென்சுதாரர்கள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன' என்று மாநிலங்கள் சபையில் உற்பத்தி மந்திரி தெரிவித்துள்ளார்.

பார்வைக் கண்ணாடித் தயாரிப்பு தொழிற்சாலை

இந்தியாவில் நிறுவுவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள்?

புதுடில்லி, ஆக. 30—

'விசேட ரகப் பார்வைக் கண்ணாடியைத் தயாரிப்பதற்காக இந்தியாவில் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவது பற்றி வெளிநாட்டு நிறுவனங்கள் சிலவற்றுடன் இன்னும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன' என்று, மத்திய உற்பத்தி மந்திரி, மாநிலங்கள் சபையில் தகவல் தந்துள்ளார்.

இதுவரையில் அவைகளில் இரண்டு கம்பெனிகள் தொழில் நுட்ப உதவியளிக்க முன்வந்துள்ளன என்றும், அவைகளின் ஒப்பந்த விதிகள் சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதர வெளிநாட்டுக் கம்பெனிகளிடமிருந்தும் தகவல் கிடைத்து, அவை பரிசீலனை செய்யப்பட்ட பிறகு, இந்த வகையில் தொழில் நுட்ப உதவி பெறுவதற்காக எந்த நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது பற்றி இறுதி முடிவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.